**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம் - 2020**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107 (5) ஆவது உபபிரிவு மற்றும் 18 ஆவது பிரிவின்கீழ் கையளிக்கப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவக ஒழுங்குவிதிகளில் 17 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தில் 108(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்களைத் தவிர்ந்து நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகததை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முற்றாகப் பெறுமானத் தேய்விட்டு முடிக்கப்பட்ட ஆனால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 166,356,155 ஆன மென்பொருட்கள் மற்றும் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பயனுள்ள ஆயுட்காலம் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றேன். 2021 ஆம் வருடத்திற்குள் நிறுவனத்தின் கற்பனைச் சொத்துக்கள் தொடர்பாக பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 103 | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆம் பந்தியின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஆயுட் காலம் மற்றும் கற்பனைச் சொத்துக்களின் பதிவளிக்கப்பட வேண்டிய காலப்பகுதி மற்றும் தேய்மானமிடப்பட வேண்டிய முறைமை மீளாய்வு செய்யப்பட்டு குறிப்பிட்ட காலப்பகுதியில் வேறுபாடு காணப்பட்டால் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்கிலெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2009 இன் பெப்ரவரி 05 ஆந் திகதிய 2009/2 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை. | இடர்க்கடன் செலுத்தப்பட முடியுமான உச்ச எல்லையான ரூபா 250,000 இற்கு மேற்பட்டதாக அடிப்படைச் சம்பளத்தின் பத்து மடங்கானது இடர்க்கடனாக வழங்கப்பட்டிருந்த 44 உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 11,364,433 ஆன தொகை மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | நிறுவகத்தின் 195 ஆவது முகாமைத்துவச் சபைக் கூட்டத்தின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை 17/2016 இல் பதவியணியினரின் அடிப்படைச் சம்பளம் உயர்வடைந்தமையால் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் பத்து மடங்கு இடர்க்கடனாக வழங்கப்படுவதற்கு தேவையான முழு ஏற்பாடுகளும் நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட வருமானத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதிசார் விளைவு

மீளாய்வாண்டின் கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 104,152,312 ஆன மிகை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 70,079,870 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 34,072,442 ஆன

முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு உழைக்கப்பட்ட வருமானம் மற்றும் மீண்டெழும் செலவுகளுக்கான அரசின் கொடுப்பனவுகள் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணினிப் பிரிவுச் சேவையின் 3 வருடத்திலிருந்து 6 வருடங்கள் வரையான பழைய கூட்டுத்தொகை ரூபா 853,500 மற்றும் 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 663,433 ஆன கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அரச பிரிவின் பல்வேறு நிறுவனங்களுக்கு கணினி மயப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்பட வேண்டிய தொகை ஆகும். அறவிடப்படுவதற்காக வாய் மூலமான மற்றும் எழுத்து மூலமான நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் நிதி ஒதுக்கப் பிரச்சினைகள் காரணமாகக் கொடுப்பனவுகளில் தாமதங்கள் ஏற்பட்டிருக்கும். இந்த அறவிட வேண்டிய தொகை தொடர்பாக நிறுவனத்தின் முகாமைத்துவக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் குறிப்பிட்ட பிரிவின் நிர்வாக அலுவலர்கள் அத் தொகையை 2021 ஆம் வருடதிற்குள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென திட்டமிட்ப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கடன் மீதிகள் விரைவில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் பத்திரத்தை மீறிய மூன்று விரிவுரையாளர்களிடமிரந்து அறவிட வேண்டிய மொத்தம் ரூபா 6,569,834 ஆனது 3 வருடங்கள் தொடக்கம் 16 வருடங்கள் வரையான காலப்பகுதியில் மிகுதியாகக் காணப்பட்டதுடன் அறவிடப்படவில்லை. | பத்திரத்தை மீறிய மூன்று விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மனிதவள மேம்பாடு மற்றும் மனிதவள வைத்தியச் செலவுக் கட்டணமாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது பேணப்பட்டு வரும் 2 நிதியங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 21,677,085 ஆன மிகுதியொன்று காணப்பட்டது. | **மனிதவள மேம்பாட்டுக் கணக்கு**<br>வெளிநாட்டுச் செயற்திட்ட ஒதுக்கீடுகளின் கீழ் மனிதவள மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் அந் நிதி முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானங்களில் இம் மிகுதி பேணப்பட்டு வருவதுடன் நிறுவகத்தின் மனிதவளப் பயிற்சி மற்றும் மேம்பாட்டிற்காக முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் தொகுப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.<br><br>**மனிதவள மருத்துவக் கட்டணக் கணக்கு**<br>நிறுவகத்தின் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் நிறுவகத்தின் வருமான நிதியத்தின் வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்களிலிருந்து பெறப்படுகின்ற ஏற்பாடுகள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புக்களில் இக் கணக்கின் மிகுதி பேணப்பட்டு வருவதுடன் ஊழியர்களின் மருத்துவ நலன்களுக்காகப் பணம் செலுத்தப்படுகின்றது. | முறையான அங்கீகாரம் பெறப்பட்டு நிதியங்கள் பேணப்படல் வேண்டும். |